சுருக்கம்

பணியமைப்பு – போக்குவரத்துத் துறை – செல்வி.த.கனிமொழி, தா/பெ (லேட்) P.லதா, இளநிலை உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், திருப்பூர் (தெற்கு) – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக 07.01.2015 முற்பகல் முதல் பணி வரன்முறை செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

உள் (போக்குவரத்து-4) துறை

அரசாணை (4D) எண்.30

நாள்: **01.06.2022**

சுபகிருது வருடம், வைகாசி 18

திருவள்ளுவர் ஆண்டு -2053

படிக்க:-

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. போக்குவரத்து ஆணையர், சென்னை அவர்களின் கடித எண்.60956/ஆர்பி-1/2013, நாள் 08.10.2020 மற்றும் 03.02.2022.

*****

ஆணை:

போக்குவரத்து ஆணையர், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட தனது கடிதத்தில், திருப்பூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணியாற்றி 26.02.2003 அன்று பணியிடையே மரணமடைந்த P.லதா என்பவரின் வாரிசுதாரரான அவருடைய மகள் செல்வி.த.கனிமொழி என்பவர் தனக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 05.11.2013 அன்று விண்ணப்பித்துள்ளார் என்றும், அரசுப் பணியாளர் இறந்து மூன்றாண்டுகளுக்குள் கருணை அடிப்படையில் பணி நியமனம் வேண்டி விண்ணப்பிக்க வேண்டும் என்று பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது என்றும், அரசு ஊழியர் மரணமடைந்த நாளன்று செல்வி.த.கனிமொழி தா/பெ.(லேட்) P.லதா சுமார் 7½ வயதே (பிறந்த தேதி 17.06.1995) பூர்த்தியானவர். எனவே, தனியர் கருணை அடிப்படையில் பணி நியமனம் வேண்டி 18 வயதினை பூர்த்தி செய்த பின்னர், அதாவது சுமார் பத்தாண்டுகளுக்கு பின்னர் விண்ணப்பித்துள்ளார் என்றும்,

Scanned with CamScanner

அவ்விண்ணப்பத்தின் அடிப்படையில் தனியருக்கு 07.01.2015-ல் இளநிலை உதவியாளர் பணிநியமனம் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

2. மேலும், பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி விண்ணப்பிப்பவர்கள், அரசு பணியாளர் மரணமடைந்து மூன்றாண்டு காலத்திற்குள்ளாக விண்ணப்பம் அளித்திருக்க வேண்டும்.

3. இந்நிலையில் செல்வி. த.கனிமொழி, தா/பெ.(லேட்) P.லதா அவர்களுக்கு வழங்கப்பட்ட கருணை அடிப்படையிலான பணிநியமனத்தினை பின்னேற்பு (Ratification) செய்து, அவரது பணியினை இளநிலை உதவியாளர் நிலையில் வரன்முறை செய்ய, ஏதுவாக விதிகளில் தளர்வு செய்து, ஆணை வழங்குமாறு போக்குவரத்து ஆணையர் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேற்காணும் போக்குவரத்து ஆணையரின் கருத்துருவினை தனியரின் சான்றிதழ்கள் மற்றும் உரிய ஆவணங்களுடன் அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அதனை ஏற்றுக் கொண்டதுடன், கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரிய செல்வி. த.கனிமொழி என்பவரது விண்ணப்பமானது அரசுப் பணியாளர் மரணமடைந்து மூன்றாண்டுகள் கடந்த நிலையில், காலம் தாழ்த்தி விண்ணப்பம் அளிக்கப்பட்டுள்ள காரணத்தால், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்ட செல்வி.த.கனிமொழி என்பவரின் பணியினை, தனியர் பணியில் சேர்ந்த நாளான 07.01.2015 முற்பகல் முதல் வரன்முறை செய்வதற்கு ஏதுவாக தனியர் பொருட்டு, அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 23.01.2020 -க்கு விலக்கு அளித்தும், அப்போது நடைமுறையிலிருந்த தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொது விதிகளில், விதிகள் 12(bbb), தற்போது தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 20(6)(b) மற்றும் நியமன நாள் முதல் பணப்பலன்கள் வழங்க பிரிவு 28(2) ஆகியவற்றை மேற்காணும் சட்டத்தின் பிரிவு 58-ஐ பயன்படுத்தி தளர்வு செய்து தனியர் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 07.01.2015 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

Scanned with CamScanner

01 SEP 2022



5. இவ்வாணை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அ.சா.எண். 8622/Q1/2022-1, நாள் 11.05.2022 மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அ.சா.எண்.2417669/G2/2022, நாள் 27.05.2022 -ன் வாயிலாக பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.கே. பிரபாகர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

<u>பெறுநர்</u>

போக்குவரத்து ஆணையர், சென்னை-5.
செல்வி. த.கனிமொழி, (போக்குவரத்து ஆணையர் வழியாக)
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை - 18/35.

<u>நகல்:</u>

போக்குவரத்துத் துறை அமைச்சர் அலுவலகம், சென்னை-9.
தொழிலாளர் நலம் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

2.6.2022
தே. நி. பிரிவு அலுவலர்
02/06/22

Scanned with CamScanner